# Proceedings
# of
# Jaffna Science Association

## Abstracts of Research Papers

**Volume: 23** **No: 01**

## Twenty-Third Annual Sessions
## 04 - 06 May 2016
## Jaffna, Sri Lanka

ISSN 1800-1289

D13

# மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் இயேசுவின் குழந்தைப் பருவம்.

**M. W. Surendraraj**
*Department of Christian and Islamic Civilizations, University of Jaffna.*
(winifreeda@gmail.com)

திருவிவிலியத்தில் இயேசுகிறிஸ்துவையும், அவரது போதனைகளையும் உள்ளடக்கிய ஒரேநற்செய்தியைக் கொண்ட நான்கு நூல்கள் காணப்படுகின்றன. நற்செய்தியாளர்கள் இயேசு இவ்வுலகில் வாழ்ந்தமுப்பத்து மூன்று ஆண்டுகளை இருதொகுதிகளாகப் பிரித்து, முன் முப்பதுவருடங்களை ஒரு தொகுதியாகவும், இறுதி மூன்று வருடங்களை ஒரு தொகுதியாகவும் குறிப்பிடுகின்றார்கள். இதில் முன் முப்பது வருடங்களைக் குறிப்பிடுகையில், இயேசுவின் குழந்தைப் பருவத்திலிருந்து பன்னிரண்டு வயது வரையானகாலப்பகுதியில் நடை பெற்றசம்பவங்களில் சிலவற்றையே முன்வைக்கின்றார்கள். பன்னிரெண்டு வயதிற்குப் பிற்பட்டபதினெட்டுஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்களை நற்செய்தியாளர்கள் முன்வைக்கவில்லை. இறுதி மூன்றுஆண்டுகள் இயேசு தம்மை வெளிப்படுத்திய காலமாகக் காணப்படுகின்றது. இங்குமத்தேயு, லுக்கா நற்செய்தியாளர்கள் இயேசுவின் குழந்தைப்பருவத்தில்இடம்பெற்றசம்பவங்களில் ஒருசிலவற்றைத் தவிரவேறுசம்பவங்களைஆதாரபூர்வமாகமுன்வைக்கவில்லை.

இவ் ஆய்வில் குழந்தைப் பருவம் குறித்து இவ்விரு நற்செய்தியாளர்களும் முன்வைக்கும் விடயங்கள் ஆழமாக ஆய்வுசெய்யப்பட்டு, அவற்றில் பொதிந்துள்ள முக்கிய விடயங்களை வெளிக் கொண்டுவருவதுடன், ஆய்வானது பின்வரும் நோக்கங்களைக் கருத்திற் கொண்டுமேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டிலுள்ள நான்கு நற்செய்தி நூல்களில் மத்தேயு, லூக்காஆகியோர் எழுதியநற்செய்தி நூல்களேஇயேசுவின் குழந்தைப்பருவம் குறித்தவிடயங்களை முன்வைக்கின்றனஎன்பதையும், இவ் இரு நற்செய்தியாளர்களும் இவ்விடயத்தை முன்வைக்கும் அமைப்புமுறையிலும், சம்பவங்களிலும் ஒற்றுமை, வேற்றுமைகள் காணப்படுகின்றன என்பதையும் தெளிவுபடுத்துவதாகும். மூல நூலானதிருவிவிலியத்திலுள்ளமத்தேயு, லூக்காநற்செய்திகளில் இருந்தும்,விவிலியவிளக்கவுரைகள்,துணை நூல்கள் போன்றவற்றிலிருந்தும் இயேசுவின் குழந்தைப்பருவம் குறித்துமுன்வைக்கப்பட்டவிபரிப்பின் இலக்கியத தன்மைகளை ஆய்வு செய்து அவை விமர்சன ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இரு நற்செய்தி நூல்களிலும் முன்வைக்கப் பட்ட கருத்துக்கள் ஒப்பீட்டுநிலையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

மத்தேயு, லூக்கா நற்செய்தியாளர்கள் இயேசுவின் குழந்தைப் பருத்தைக் குறிப்பிடுகையில் இந்நிகழ்வை விபரிக்கும் சூழல், முன்வைக்கும் முறைஎன்னும் சில விடயங்களில் வேறுபட்டுள்ளார்கள் என்பதும், இவ்வாறான வேற்றுமைகள் தோன்ற நற்செய்தி தோன்றிய பின்னணி, அதனைப் பெற்றுக் கொண்டசமூகம் என்பன சிலகாரணிகளாக அமைகின்றன என்பதும் இவ் ஆய்வின் முடிவுகளாக முன்வைக்கப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** குழந்தைப் பருவம்,நற்செய்தியாளர்கள்,நற்செய்தி